**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF ROUGH STONE & GRAVEL QUARRY OF M/S. THIRU.P.ARULDOSS ROUGH STONE & GRAVEL QUARRY IN CLUSTER AT AN EXTENT AREA OF 2.94.5 HECT AT S.F.NO.41/2, 66/1A(P),66/1B AND 66/8,T.C KANDIGAI VILLAGE, TIRUTTANI TALUK, TIRUVALLUR DISTRICT ON 11.12.2024 AT 02.00 PM BY TAMILNADU POLLUTION CONTROL BOARD THIRUVALLUR.**

| | | |
|---|---|---|
| **ProjectName** | : | **M/s. P.ARULDOSS,<br>ROUGH STONE & GRAVEL QUARRY** |
| **Place** | : | S.F.No.41/2, 66/1A(P),66/1B &66/8,T.C Kandigai Village, Tiruttani Taluk, Tiruvallur District |
| **Date and Time** | : | 11.12.2024 AT 11.00 AM [postponed to 2.00 PM )<br>Sri Venkateshwara Kalyana Mandapam, Chittoor Road, K.G.Kandigai, Tiruttani Taluk, Tiruvallur District |
| **Presence of** | : | 1. Thiru. A. RAJKUMAR., M.A., B.Ed., District Revenue Officer, Tiruvallur District.<br>2. Thiru. P. Ravichandran., M.E District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvallur.<br>3. List of Public participants are attached |
| **Project Head** | : | Thiru Muthupandi -rep. of Thiru.P.Aruldoss |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board has welcomed, the District Revenue Officer, Tiruvallur, Tahsildar, Tiruthani and the public for the public hearing. The proposed rough stone and gravel quarry of M/s. P. Aruldoss Rough Stone and Gravel Quarry at S.F.NO.41/2, 66/1A(P),66/1B and 66/8 T.C Kandigai village, Tiruthani

Taluk, Tiruvallur District in an extent of 2.94.5 Hec. is required environmental clearance from the State Environmental Impact Assessment Authority. Environmental impact assessment report was prepared and placed before the assessment committee meeting and issued letter to conduct public Hearing. Based on the this, public notice for public hearing was published on 26.10.2024 in English newspaper Deccan Chronicle and Tamil newspaper Daily Thanthi. He pointed out that today 11.12.2024 public consultation meeting has been arranged.

Thiru Rajkumar, environmental impact assessment consultant explained about the project of M/s. P. Aruldass rough stone & gravel quarry and the environmental impact caused by it, to the public through a power point presentation.

Following the presentation, the public were invited to express their views and concerns if any by clearly indicating their name and village to which he/she belongs to the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvallur. He also added that their comments will be recorded through audio and video and will be submitted to the State Environmental Impact Assessment Authority. Again, the public were invited to express their views by the District Revenue Officer.

Following this, the details of the people who have registered their views are given below.

**Tmt. Selvi. Maharajapuram Village,**

No issues against the quarry and to give employment opportunities in our village. Since only one bus is coming, another bus should be arranged. Road facilities should be provided.

**District Revenue Officer, Tiruvallur**

Other requests except views about the project, ask you after this meeting and tell me in person..

**Tmt. Eswari T.C. Kandigai village,**

we have not received the patta, they say that there is no patta because the quarry is coming, there is no electricity and requesting should do it.

**Tmt. Pramila, Rukmanipuram village,**

Temple should be built in our village.

**Thiru. Hari and Ms. Hari., T.C. Kandigai village,**

While blasting the hill, cultivation land and plantations adjoining the hills will be affected. Flower plants will be damaged and hence we don't want quarry.

**Thiru. Pazhani, T.C. Kandigai village,**

There is already a stone quarry, can't do cultivation. Due to blasting, teak plants, 250 mango trees have been damaged. Inspite of spending thirty lakhs for plants, everything went vain. Water also gets smells of that blasting materials. Officials have visited, no action is taken, if we ask, they threaten us, our lives are not safe. We cannot do agriculture and we don't need quarries, how can pollution control board give permission.

**Thiru. Rajini, T.C. Kandigai village,**

Due to stone quarrying, there is no drinking water, water flow gets affected and agriculture is affected. Hence no need quarry.

**Thiru. Thamotharan, T.C. Kandigai village,**

He said we have been living here since the time of our forefathers and we need Patta. No issues about the quarrying activity.

**Thiru. Sanganathan, T.C. Kandigai village,**

We requires patta and house.

**Thiru. Kumar, Rukmanipuram village,**

We need road facilities, noise should be less. He said that we do not have any problem as the quarry is being set up.

Following this, the District Environmental Engineer stated that the meeting ended as on one came forward to comment, He also informed that the hearing report will be sent to the participants of the hearing through audio and video CDs, and written comments received during the hearing will be forwarded to the State Environmental Impact Assessment Authority by Tamil Nadu through Tamilnadu Pollution Control Board.

As there were no questions from the public, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board closed the hearing.

16/11/24

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Tiruvallur

16/11/24

District Revenue Officer,
Tiruvallur District.

3/3

3

**திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், T.C கண்டிகை கிராமம் புல எண்கள் 41/2, 66/1A (P), 66/1B & 66/8ல், 2.94.5 ஹெக்டர் பரப்பளவில் தி/ள். P. அருள்தாஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம் அமைய உத்தேசித்துள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம் க்ளஸ்டரில் வருவதால் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் 11.12.2024 அன்று பிற்பகல் 02.00 மணியளவில் தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் திருவள்ளூர் மாவட்ட அலுவலகத்தால் நடத்தப்பெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கைகள் விபரங்கள்:**

| | | |
|---|---|---|
| **திட்டத்தின்பெயர்** | : | **தி/ள். P.அருள்தாஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்,** |
| **அமையவுள்ள இடம்** | : | சர்வே எண் 41/2, 66/1A (P), 66/1B & 66/8, T.C கே.ஜி. கண்டிகை, திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். |
| **நாள் மற்றும் நேரம்** | : | **11.12.2024 அன்று முற்பகல் 11.00 மணி (பிற்பகல் 02.00 மணிக்கு நீட்டிக்கப்பட்டது)**<br>ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்யாண மண்டபம்,<br>சித்தூர் ரோடு, கே.ஜி.கண்டிகை,<br>திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் |
| **முன்னிலை** | : | 1. திரு. ஆ.ராஜ்குமார், M.A., B.Ed.,<br>மாவட்ட வருவாய் அலுவலர்,<br>திருவள்ளூர் மாவட்டம்.<br><br>2. திரு.ப. ரவிச்சந்திரன்., எம்.இ.,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவள்ளூர்.<br><br>3. கருத்துக் கேட்புக் கூட்டத்தின் பங்குப் பெற்ற அனைவரின் விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| **திட்ட அமைப்பாளர்** | : | திரு. P. அருள்தாஸ் பிரதிநிதி திரு வே.முத்து பாண்டி |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவள்ளூர் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர், தாசில்தார், திருத்தணி மற்றும் பொதுமக்கள் அனைவர்களையும் வரவேற்றார். தி/ள். P. அருள்தாஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சர்வே எண் 41/2, 66/1A (P), 66/1B & 66/8, T.C கண்டிகை கிராமத்தில் – 2.94.5

ஹெக்டர் பரப்பளவில் குவாரி அமைப்பது தொடர்பாக, சுற்றுச்சூழல் அனுமதியை, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திடம் பெற வேண்டியுள்ளதால், சுற்றுச்சூழல் வல்லுனர்கள் மதிப்பீட்டு குழுக் கூட்டத்தில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின்படி, பரிந்துரைத்த கடிதத்தில் அடிப்படையில், பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கான அறிவிப்பு 26.10.2024 அன்று டெக்கான் குரோனிக்கிள் என்கின்ற ஆங்கில நாளிதழிலும் மற்றும் தினத்தந்தி என்கின்ற தமிழ் நாளிதழிலும் 11.12.2024 அன்று நடைபெறுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டது. இன்று 11.12.2024 பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

பின்னர் தி/ள். P. அருள்தாஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம் தொடர்பான விளக்கங்களையும் அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தினைப் பற்றியும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு திட்ட ஆலோசகர் திரு ராஜ்குமார் அவர்கள் இத்திட்டம் குறித்த விரிவான விளக்கங்களை **power point presentation** மூலம் பொதுமக்களுக்கு விளக்கினார்.

அதன் பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவள்ளூர் அவர்கள் பொதுமக்களை, தங்கள் பெயர் மற்றும் ஊர் பெயர் குறிப்பிட்டு திட்டம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள் ஏது இருப்பின் அவற்றை எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தாங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஒலி மற்றும் ஒளி அதாவது ஆடியோ மற்றும் வீடியோ மூலமாக பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டார். மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்களிடம் மீண்டும் தங்கள் கருத்துக்களை பதிவு செய்ய வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து தங்களது கருத்துக்களை பதிவு செய்த நபர்களின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகின்றது.

**திருமதி. செல்வி, மகாராஜபுரம் கிராமம்.**

எங்களுக்கு தேவையான கோரிக்கை குவாரி நடத்துவதில் எந்த பிரச்சனையும் இல்லை. எங்க கிராமத்தினருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஒரே பஸ்

வருவதினால் இன்னொரு பஸ் வசதி செய்து தரவேண்டும். சாலை வசதி செய்து தரவேண்டும் என்று கூறினார்.

**மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர்.**

திட்டம் தொடர்பான கருத்துக்களை தவிர, மற்ற கோரிக்கைகள் இந்த கூட்டம் முடிந்தவுடன் உங்களிடம் கேட்கிறேன், நீங்கள் என்னிடம் சொல்லலாம் என கூறினார்.

**திருமதி. ஈஸ்வரி, TC கண்டிகை கிராமம்.**

எங்களுக்கு பட்டா வரவில்லை ஏன் என்று கேட்டால் குவாரி வருவதால் பட்டா இல்லை என்று சொல்கிறார்கள் மின்சார வசதி இல்லை அதை செய்து தரவேண்டும் என்று கூறினார்.

**திருமதி. பிரமிளா, ருக்மணிபுரம் கிராமம்.**

எங்கள் கிராமத்தில் கோவில் கட்டிதர வேண்டும் என்று கூறினார்.

**திரு. ஹரி மற்றும் அவரது மனைவி, TC கண்டிகை கிராமம்.**

மலை ஓரத்தில் எங்களுடைய விவசாய நிலம் இருப்பதால் மலையை வெடி வைத்து உடைக்கும் போது எங்களின் பயிர் மற்றும் தோப்புகளுக்கு பிரச்சனை ஏற்படும். பூச்செடிகள் எல்லாம் நாசமாகிவிடும் எனவே எங்களுக்கு குவாரி தேவையில்லை என்று கூறினார்கள்.

**திரு. பழனி, TC கண்டிகை கிராமம்.**

ஏற்கனவே கல் குவாரி இருப்பதனால் எங்களுக்கு விவசாயம் செய்யமுடியவில்லை, தேக்கு செடிகள், 250 மாமரங்கள் வெடிவெடித்ததினால் பாழாகிவிட்டது. முப்பது லட்சத்திற்கு செலவு செய்து செடிகள் வைத்து அனைத்தும் நாசமாகிவிட்டது. வெடி வெடிப்பதால் தண்ணீரில் வெடி மருந்து வாசனை வருகிறது. அதிகாரிகள் பார்வையிட்டனர் எந்த நடவடிக்கையும் இல்லை கேட்டால் மிரட்டுகிறார்கள் எங்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லை. விவசாயம் செய்ய முடியவில்லை எங்களுக்கு குவாரி தேவையில்லை எப்படி மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதி கொடுக்கிறார்கள் என்று கூறினார்.

**திரு. ரஜினி, TC கண்டிகை கிராமம்.**

கல் குவாரியால் குடிப்பதற்கு குடிநீர் இல்லை, நீர் வரத்து பாதிக்கப்பட்டு, விவசாயம் பாதிப்பு அடைகின்றது குவாரி தேவையில்லை என்று கூறினார்.

**திரு. தாமோதரன், TC கண்டிகை கிராமம்.**

நான் இங்கு எங்கள் முதாதையர் காலத்தில் இருந்து வசித்து வருகின்றோம். எங்களுக்கு பட்டா தேவை. குவாரி வருவதால் எங்களுக்கு எந்த பிரச்சனை இல்லை என்று கூறினார்.

**திரு. சங்கநாதன், TC கண்டிகை கிராமம்.**

எங்களுக்கு வீடு, பட்டா தேவை என்று கூறினார்.

**திரு. குமார், ருக்மணிபுரம் கிராமம்,**

எங்களுக்கு சாலை வசதி தேவை. வெடி சத்தம் குறைவாக இருக்கவேண்டும். குவாரி அமைவதால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறினார்.

இதனை தொடர்ந்து பொதுமக்கள் யாரும் கருத்து தெரிவிக்க முன்வராததால், கூட்டம் முடிவடைந்ததாக தெரிவித்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்களின் கருத்து கேட்பு அறிக்கையை பதிவு செய்யப்பட்ட ஒலி மற்றும் ஒளி குறுந்தகடுகள், கேட்புக்கூட்டத்தில் நடவடிக்கையின் போது எழுத்து மூலமாக பெறப்பட்ட கருத்துக்கள் தமிழ் நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேற்கொண்டு, பொது மக்களிடம் கேள்விகள் எதுவும் எழாததால், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கருத்து கேட்பு கூட்டத்தை முடித்து வைத்தார்.

16/12/24

மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவள்ளூர் மாவட்டம்

2/3

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவள்ளூர்.

2/3